**நிகவெரடிய பிரதேச சபையின் - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிகவெரடிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நிகவெரடிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் சபை நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சபையின் பொதுச் சந்தை மலசல கூட்டங்களை நிர்மாணித்தல் தொடர்பான பிடித்துவைத்தல் பணத்தின் பெறுமதி ரூபா 33,110 தொகை 2022 யூலை 04 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் அது உரிய கணக்குகளிலிருந்து நீக்கப்படவில்லை. | நாட்குறிப்பு இலக்கம் 02 இன் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்குவைத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களும் பட்டோலைகளுக்குமிடையே ரூபா 21,975,636 கூட்டுமொத்த பெறுமதியான வித்தியாசம் காணப்பட்டது. | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும்.. |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) சட்ட விதி 59 | மீளாய்வாண்டின் போது சபை அதிகாரப் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு அப்பட்டியலில் குறிப்பிட்ட அனைத்து கைத்தொழில்களும் கைத்தொழில் வரிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வு பட்டியலை ஒழுங்குமுறைப்படி அடுத்துவரும் காலங்களில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | உரிய சட்டவிதி அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 39,728,102 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 18,538,795 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமா னம்** | **பட்டியலிட ப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவை (பட்டியலிட ப்பட்ட வருமானத் தில்)** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமா னம்** | **பட்டியலிட ப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் உள்ளவாற ான நிலுவை (பட்டியலிட ப்பட்ட வருமானத் தில்)** |
| | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| வீத வரியும் | 7,120 | 6,351 | 6,299 | 7,338 | 776 | 5,946 | 2,944 | 3,002 |
| வரியும் வாடகை | ,16,712 | 5,849 | 10,994 | 5,768 | 18,348 | 2,747 | | 14,239 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,676 | 509 | 1,562 | 113 | 2,066 | 800 | 600 | 1,465 |
| ஏனைய வருமானம் | 37,965 | | 52,158 | 61 | 36,142 | 1,550 | 24,166 | 11,975 |
| | -------- | -- ----- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- |
| மொத்தம் | 63,473 | 12,709 | 71,013 | 13,280 | 57,332 | 11,043 | 27,710 | 30,681 |
| | ===== | ====== | ====== | ====== | ====== | ===== | ====== | ====== |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வீதவரி மீதிக்கு மத்தியில் 3 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைய மீதி ரூபா 1,235,018 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதி ரூபா 705,506 தொகையும் காணப்பட்டது. | இன்னும் காணப்படுகின்ற நிலுவையான வீதவரி பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான வீதவரியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்ன் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 20,431 மீதியில் ரூபா 2,510 தொகை 3-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதும் ரூபா 3,445 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டதுமான பழைய மீதியாகும். | ஏக்கர்வரி நிலுவைப் பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான ஏக்கர் வரியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) வாடகை** | | |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுச் சந்தை வியாபார கட்டிடத் தொகுதியில் பஸ்தரிப்பிட கடைகள், நடமாடும் கடைகளிலிருந்தும் மற்றும் பொதுவசதி கடைகளிலிருந்தும் ரூபா 2,686,300 நிலுவை வாடகை அறவிட வேண்டியுள்ளது. | இன்றுவரை காணப்படுகின்ற நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான வாடகையை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஈ) நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 43,777,250 மற்றுடம் முத்திரை கட்டணம் ரூபா 17,256,977 ஆகும். | நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 10 கணக்கு மீதி விடயங்களின் மொத்த பெறுமதி ரூபா 116,639,023 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா 1,406,046 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதியாகும். | நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 12 கணக்கு மீதி விடயங்களின் மொத்த பெறுமதி ரூபா 73,351,642 ஆக இருந்ததுடன் அவற்றில் 05 ஆண்டுகள் காலத்தினை மிகைத்திருந்த மூன்று கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 1,332,186 ஆகும். | எதிர்வரும் காலங்களில் கடையை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய கணக்குகளை துரிதமாக தீர்த்துவைத்தல் வேண்டும். |
| (இ) | கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு முடியாதிருந்தமையின் காரணமாக முன்னைய ஆண்டிலும் உடன்படிக்கை செய்யப்படாதிருந்த பஸ் தரிப்பிடங்களின் 5 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் போதும் எந்த வருமானமும் சபைக்கு கிடைக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்து குத்தகை ஆதனங்களிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 2022 ஆம் ஆண்டில் 21 தொலைபேசி ஒலிபரப்பு கோபுரங்கள் காணப்பட்டதுடன் அக்கோபுரங்கள் தொடர்பாக வியாபார வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | தொலைபேசி ஒலிபரப்பு கோபுரங்கள் தொடர்பாக வியாபார வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சபையினால் பிரதேசத்தின் அபிவிருத்திக்கான புதிய நிர்மாணங்களை இனங்கண்டு அதற்காக வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | வீதவரி ஆதனங்களை சரியாக இனங்கண்டு வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் பொதுக் கிணறுகளுக்காக கிடைத்த 29 காணிகளும் 161 மயானங்களினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்புக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீடு செய்து கணக்குவைத்தல் வேண்டும். |

## 3.2. சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் பேணப்படுகின்ற 162 மயானங்களின் உரிமை சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் 162 மயானங்களின் உரிமையை பொறுப்பேற்கும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்றுவருகின்றது. | மயானங்களின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3. பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையிடம் 100 பொதுக் கிணறுகளும் 258 குழாய்க் கிணறுகளும் காணப்படுகின்றது என பதிவேடுகளில் காட்டப்பட்டிருந்தும் அவற்றின் உள்ளமை மற்றும் செயற்படும் தன்மை தொடர்பாக பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாததனால் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட கிணறுகள் தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அண்ணளவாக பொதுக் கிணறுகளுக்கு மத்தியில் 40 கிணறுகளும் குழாய்க் கிணறுகளுக்கு மத்தியில் 53 குழாய்க் கிணறுகளும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத மட்டத்தில் காணப்பட்டன. | இது தொடர்பாக பரீட்சிப்பதற்கு 2022 நவம்பர் 28 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் செயற்பாடற்ற மட்டத்தில் காணப்படும் பொதுக் கிணறுகளை நீக்கி பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 05 வருமான விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 34.5 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டமை மற்றும் 05 செலவு விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவுகளுக்குமிடையே 49 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டமையின் காரணமாக பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டினைத் தயாரிப்பதற்கும் அதன் அடிப்படையில் நிதி ஏற்பாட்டினை சிறப்பாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் குறிக்கோள்களும் இனங்காணப்பட்டிருந்தும் அக்குறிக்கோள்களையும் இலக்குகளையும் அளவீடு செய்வதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அளவீடு செய்வதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு அமுல்ப்படுத்தப்படுகின்றன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும் குறிக்கோள்களையும் இனங்கண்டு அவற்றினை அடைந்துகொள்ளுதல் வேண்டும். |